# உரிமம் இன்றி இயக்கப்பட்ட அந்நியப் பிரஜைகளின்

# கடைப் பொருட்கள் பறிமுதல்



கோலாலம்பூர், ஏப். 23-

முறையான உரிமம் இன்றி வியாபாரம் செய்து வந்த அந்நியப் பிரஜைகளின் 7 கடைகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று முன்தினம் பறிமுதல் செய்தது. ஜாலான் சுல்தான், ஜாலான் பெட்டாலிங், ஜாலான் சீலாங், ஜாலான் துன் டான் செக் லோக் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொண்ட அதிரடிச் சோதனையின் மூலம் இந்தக் கடைகள் பறிமுதல் செய்யப்பட்டன. முன்னதாக இந்தக் கடைகளில் அந்நியப் பிரஜைகள் முறையான உரிமம் இன்றி பயன்படுத்தப்பட்ட பொருட் கள், வெத்தலை வகைகள், உணவுகளை விற்பனை செய்து வந்ததாக மாநகர் மன்றம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இது தவிர உபரிப் பாகங்கள், உணவு விற்பனை செய்த உள்நாட்டு வியாபாரிகள் இருவருக்கு கம்பாவுன்ட் நோட்டீசுகள் வழங்கப்பட்டுள்ளன. 2016 (கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேசம்), வியாபாரிகள் உரிம சிறு நிலைச் சட்டத்தின் அடிப்படையில் இந்தக் கம்பாவுன்டுகள் வழங்கப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் செராஸ், ஜாலான் லொம்போங் தாமான் பீகார் ஜாவில் உள்ள மாநகர் மன்றக் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டன எனவும் அறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.